## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 15/2015</u>

நாள் 09.03.2026

DW 3 – மணி

த/பெ – பழனி பண்ணாடி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க வரவேண்டி 3ம் பிரதிவாதி வெங்கடாசலம்தான் என்னை அழைத்தார். இந்த வழக்கு பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்த வழக்கு என்று தெரிந்துகொண்டேன். இந்த பாக தாவாவை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் அது எனக்கு தெரியாது. எனது பிறந்த தேதி 28.04.1963 ஆகும். நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். என்மீது 20 வருடத்திற்கு முன்பு ஒரு கொலை வழக்கு இருந்தது என்றால் சரிதான், நான் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டேன். என் மீது வேறு வழக்குகள் எதுவும் இல்லை. நான் அடிக்கடி நீதிமன்றத்திற்கு சென்றவரும் பரிச்சயம் உண்டு என்றால் இல்லை. இந்த வழக்கு நடந்து வருகின்ற விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும்.

2. கருப்பண்ணகவுண்டருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். கருப்பண்ணகவுண்டரின் மனைவி பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் இறந்துபோய்விட்டார். கருப்பண்ணகவுண்டரின் மற்றொரு மகன் பெயர் செல்வம். அந்த செல்வம் உயிரோடு இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டரின் மனைவி அம்மணியம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எத்தனை அயிட்டங்களாக உள்ளது என்றால், 15 ஏக்கர் இருப்பதாக சொன்னார். கருப்பண்ணகவுண்டர்

இறக்கும்போது அவருக்கு என்ன வயது இருந்திருக்கும் என்று எனக்கு தெரியாது. அவர் இறப்பதற்கு 2,3 மாதங்களுக்கு முன்பு நான் கருப்பண்ணகவுண்டரை திம்மநாயக்கன்பாளையம் வீட்டில் வைத்து பார்த்தேன். அப்போது அவர் நன்றாகத்தான் இருந்தார். 3ம் பிரதிவாதி வெங்கடாசலம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. அந்த ஆவணங்கள் பற்றிய விவரமும் அவர் என்னிடம் சொல்லவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 9, 10, 11 பாராக்களில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை, அந்த ஆவணங்களை பொறுத்து கருப்பண்ணகவுண்டர் எனக்கு ஏற்கனவே சொல்லியிருந்தார். 2009ம் ஆண்டு வாக்கிலேயே சொத்துக்களை பொறுத்து ஏற்பாடு செய்துவிட்டதாக கருப்பண்ணகவுண்டர் என்னிடம் சொன்னார். நான் சொன்ன 15 ஏக்கர் சொத்து பூர்வீக சொத்து என்றால் அது கருப்பண்ணகவுண்டரின் சொத்து. அந்த சொத்து கருப்பண்ணகவுண்டருக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை 2009ம் ஆண்டில் என்னிடம் தெரிவித்துள்ள நிலையில் கருப்பண்ணகவுண்டர் அவருடைய மகளுக்கு சொத்து ஏதேனும் ஏற்பாடு செய்து வைத்துள்ளீரா என்று கேட்டேனா என்றால் இல்லை. கருப்பண்ணகவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

3. கருப்பண்ணகவுண்டர் அவர் இறப்பதற்கு முன்பாக பக்கவாத நோயால் இருந்து வந்தார் என்று 2009ம் ஆண்டு ஆவணங்களிலேயே சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் அதனால் அந்த சொத்துக்களில் வாதிக்கும் பாகபாத்திய உரிமை உள்ள நிலையில் வாதியை விட்டுவிட்டு ஏற்படுத்திக்கொண்ட மேற்படி ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கருப்பண்ணகவுண்டர் 1979ம் ஆண்டில் தறிக்குடோன் கட்டியது எனக்கு தெரியும் என்று சொல்வது பொய் என்றும், நான் அப்போது 13 வயது இளவராகத்தான் இருந்து வந்தேன் என்றும், அந்த தறிக்குடோனுக்கும் எனது ஊருக்கும் 20 கி.மீ தூரம் இருக்கும் என்றும்,

இந்த நிலையில் அந்த தறிக்குடோனை கருப்பண்ணகவுண்டருக்கு விற்றதாகவும், அதை முத்துசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 12ல் சொல்லியுள்ளது போல 3ம் பிரதிவாதி கடந்த 4 வருடத்திற்கு முன்பாகத்தான் புதிய கடைகள் கட்டி சொத்து வரி, மின் இணைப்பு பெயர்மாற்றம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த இடத்தில் 3ம் பிரதிவாதி கடை கட்டியதால்தான் அந்த அடிநிலம் அவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாகப்பிரிவினை அமுலுக்கு வந்துவிட்டதாக சொல்லும் பாகப்பிரிவினை எந்த வருட பாகப்பிரிவினை என்றால் அது எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி திருப்பூர், பாளையக்காடு விலாசத்தில்தான் வசித்து வருகிறார் என்றால் தோட்டத்திலும் வசித்து வருகிறார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 9, 10, 11 பாராக்களில் சொல்லியுள்ள ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது நண்பர், அவரது சகோதரர் செல்வமுத்து எனக்கு அவ்வளவாக தெரியாது.

5. கருப்பண்ணகவுண்டர் 2009ம் ஆண்டிற்கு முன்பாகவே பக்கவாத நோய் ஏற்பட்டு கை,கால் வராமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றும், அவருக்கு கண்பார்வை தெரியாமலும், காது கேட்காமலும் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அவர் சாகும் வரையில் நன்றாக இருந்தார் என்று சொல்கிறேனா என்றால் இறப்பதற்கு 2, 3 மாதங்களுக்கு முன்பாக நான் அவரை பார்த்தபோது அவர் நன்றாக இருந்தார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 2009ம் ஆண்டில் ஏற்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. கருப்பண்ணகவுண்டரின் மகளான கனகரத்தினத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் அது எனக்கு தெரியாது. கருப்பண்ணகவுண்டர் அவர் இறக்கும் காலம்வரையில் தாவா சொத்துக்களை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை அவரது

மகன்கள்தான் அனுபவித்து வந்தார்கள். நான் கருப்பண்ணகவுண்டருக்கு எந்தவித ஒத்தாசையும் எப்போதும் செய்தது கிடையாது. கருப்பண்ணகவுண்டர் பக்கவாதத்தால் எந்த ஒரு ஆவணத்தையும் எழுதிக்கொடுக்க முடியாத நிலையில் படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது நண்பர் 3ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:39:47 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**